# இலங்கைத் தமிழரசுக் கட்சி
## (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

**2011 மே தினக் கூட்ட தீர்மானங்கள்**

1) விசம் போல் ஏறி அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினால் நாட்டின் முழுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை சமாளிக்க முடியாத நிலையிலுள்ளனர். குறிப்பாக உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தினர் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். உழைப்பில்லாமல், நிவாரணமும் இல்லாமல் அகதிகளாக உள்ள மக்களின் நிலை மிகமோசமடைந்துள்ளது.அவர்களுக்கு நிவாரணம் அதிகரிக்கப்பட வேண்டும். எனவே அரசாங்க பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2) வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் அடிப்படையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்படல் வேண்டும். அதிலும் தேர்தல் காலத்தில் அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு வழங்கப்படல் வேண்டும்.

3) ஜனாதிபதி செயலகம் மற்றும் ஓய்வூதிய பணிப்பாளரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2006ம் ஆண்டுக்கு முன்பு ஓய்வூதியம் பெற்றவர்களுக்கான ஓய்வூதிய முரண்பாட்டை நீக்கி அவர்களது ஓய்வூதியத்தை 2006ம் ஆண்டின் சம்பளத்திட்டத்தின் அடிப்படையில் மீளாய்வு செய்ய வேண்டும் என அரசாங்கத்திடம் கோருகின்றோம்.

4) வலி வடக்கு, வடமராட்சி கிழக்கு, வன்னி, கிளிநொச்சி, புலோப்பளை, இத்தாவில் மற்றும் முல்லைத்தீவு, சம்பூர் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் இன்னும் முறைப்படியாகவும் முழுமையாகவும் மீள் குடியேற்றப்படாத நிலையில் ஆயிரக் கணக்கானோர் தொடர்ந்தும் நண்பர்கள் உறவினருடனும் தற்காலிக கொட்டில்களிலும் அடிப்படை வசதிகளின்றியும் உரிய நிவாரண உதவிகளோ கொடுப்பனவுகளோ இன்றியும், வாழ்வாதார வசதிகள் எவையுமின்றியும், நட்ட ஈடு எதுவும் வழங்கப்படாமலும், மிகுந்த வேதனையுடன் வாழ்கின்றனர்.

இந்தக் குறைபாடுகளை உடன் நீக்கி வேண்டிய உதவிகளையும், தேவைகளையும் பூர்த்தி செய் யவும் மீளக் குடியேறாமல் இருப்பவர்களை முஸ்லீம் மக்கள் உட்பட தத்தமது இடங்களில் குடியமர்த்தவும் அரசாங்கம்நடடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோருகின்றோம்.

5) இலங்கையில் இடம் பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ. மூனினால்,நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கை வெளியிடப்பட்ட நிலையில் அதன் சிபார்சுகளின் அடிப்படையில், இலட்சக்கணக்கான உயிர்களையும், கோடிக்கணக்கான சொத்துக்களையும் இழந்து நிற்கும் தமிழ் தேசிய இனத்துக்கு இனியாவது நியாயம் கிடைக்கும் வகையில் தமிழக அரசும் இந்திய அரசும் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் என்றும் குறிப்பாக இனப்பிரச்சனைத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்றும் அது சர்வதேச மேற்பார்வையில் இடம் பெற வேண்டுமென்ற இக் குழவின் சிபார்சை அமுல் செய்வதை உறுதி செய்யும் சர்வதேச நடவடிக்கைகளை முடிக்கி முன்னெடுக்க இந்தியா அரசு உரிய முனைப்புக் காட்ட வேண்டும் என்றும், தமிழினத்தின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான வழிமுறைகளை

இந்தியா, சீனா, ரஸ்யா, போன்ற நாடுகள் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளும் சர்வதேச ரீதியில் அக்கறையுடன் முன்னெடுக்கவேண்டும் எனக் கோரி நிற்கிறோம்.

6) யுத்தம் முடிவடைந்து, இரண்டு வருடங்களாகியும், யாழ்ப்பாண குடா நாட்டில், மர்மக் கொலைகளும், ஆட் கடத்தல்களும், அச்சுறுத்தல்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இவற்றுக்குப் பின்னனியில் ஆயுதக் குழுக்களே இயங்குவதாக கருதப்படுவதால் சட்ட பூர்வமற்ற ஆயுதம் வைத்திருப்போர் சகலரிடமும் இருந்து ஆயுதங்களை உடனடியாக களைய வேண்டும் என அரசாங்கம் கோரப்படுகிறது.

7) யுத்த காலத்திலும் கல்விச் செயற்பாடுகளை சீர் குலைக்காமல் செயற்பட்ட பெருமைக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவா் சமூகமும் பல்கலைக்கழக கல்வி சார் மற்றும் கல்வி சாரா சமூகமும் அந்த பெருமையைத் தொடர்ந்து பேணும் வகையில் தற்போது எழுந்துள்ள கருத்து வேறுபாட்டை சுமுகமாக பேசித் தீர்த்து கல்விச் செயற்பாடுகள் தடங்கலின்றியும் அச்ச சூழ் நிலை எதுவுமின்றியும் புரிந்துணர்வுடன் தொடர நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

8) யாழ்ப்பாண குடா நாட்டு விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை திருப்தியாக மேற் கொள்ளக் கூடிய வகையில் அவர்களுக்கு வேண்டிய உள்ளீடுகள், மற்றும் உபகரணங்களை இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை மேற் கொள்வதுடன், இடைத்தரகர்களின் சுரண்டல்களின்றி, தமது உற்பத்தி பொருட்களை சந்தைப் படுத்துவதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும்.

9) யாழ்ப்பாணக் குடா நாட்டின் மேற்கு கடற் பகுதிகளிலும் கிழக்குப் பகுதியான வடமராட்சி கிழக்கு, மற்றும் முல்லைத்தீவு கடற் பகுதிளிலும் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்பதால் எமது பகுதி கடற் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் கடல் வளமும் பாதிக்கப்படுவது மிகவும் கவலைக்குரியது.

எனவே கடற்றொழிலாளர் அமைப்புக்களுடன் இலங்கை-இந்திய அரசுகள் கலந்தாலோசித்து இந்திய மீனவர்களின் அத்து மீறல்களைத் தவிர்க்கவும் கடலில் மீனவர்கள் சுதந்திரமாகஉயர் சக்தி வாய்ந்த படகுகளிலம் மீன் பிடிக்கக் கூடியதாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டப்படுகிறது.

10) யுத்தம் முடிவடைந்த நிலையிலும் எமது பகுதி கடற் தொழிலாளர்கள் மீதான மீன் பிடிக் கட்டுப்பாடுகள் இன்னும் அமுல்படுத்துவதை நீக்கி அவர்கள் சுதந்திரமாக தொழில் செய்யும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

மேலும், இந்திய மீனவர்கள் மற்றும் தென்னிலங்கை மீனவர்ள் தமது தொழிலுக்காக பல நாட்கள் படகுகளை –Multi day Boats- பாவிக்கும் உரிமை எமது மீனவ சமூகத்தி ற்கும் வழங்கப்படல் வேண்டும் எனக் கோருகின்றோம்.

11) கள் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அவர்கள் திறமைக்கு ஏற்ப கேட்கப்படுகின்ற பனை தென்னைகளிலிருந்து கள் இறக்குவதற்கு அனுமதி வழங்கப்படல் வேண்டும் ஊற்றுக் கள்ளு கழிபடக் கூடாது. முழுக் கள்ளும் அடைத்து விற்பனை செய்யப்படல் வேண்டும் பனை, தென்னை மூளவளத்தினால் வருகின்ற வருமானத்தில் இலாபத்தில் உற்பத்தியாளருக்கு தொழிலாளர்களுக்கு பங்கு வழங்க வேண்டும் என்பதுடன் அம் மக்களுக்கான நலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

12) யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுண்ணக்கல், மணல் போன்ற மூலவளங்கள் எதுவித கட்டுப்பாடுகளுமின்றி அகழப்பட்டு சுரண்டப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் இவற்றின்

அகழ்வு நடவடிக்கைகளை ஆய்வுகளின் அடிப்படையில் நெறிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும.

13) இலங்கை அரசும் -தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்தி வரும் பேச்சு வார்த்தையை வரவேற்கின்றோம். இந்த பேச்ச வார்த்தையில் பின்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்

1. உயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு அப்பிரதேசத்தில் அந்த நிலங்களுக்குச் சொந்த மக்கள் மீளக் குடியேற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. மீளக் குடியேற்றப்படுபவர்களுக்குத் தரமான வீடுகள் கட்டிக் கொடுப்பதுடன் வாழ்வாதாரங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட வேண்டும். உயிர் உடமைகளுக்கான நட்ட ஈடுகள் சர்வதேச மதிப்பீட்டின் அடிப்படையில் நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

3. வாழ்க்கையை உழைப்பாளரை இழந்த குடும்பப் பெண்கள் மற்றும் அங்க ஈனர்களுக்கு வாழ்வளிக்க தகுந்த திட்டங்கள் வகுக்கப்பட்டு அவர்களுக்கு வாழ்வாதாரங்களும் வேலை வாய்ப்புக்களும் பயனுற உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

4. நீண்ட காலம் சந்தேகத்தின் பேரில் சிறைகளில் அடைக்கப்பட்டவர்கள் போர்க்காலத்திலும் அதன் பின்னரும் சரணடைந்தவர்களுக்கும் மன்னிப்பளித்து விடுதலை செய்ய வேண்டுமென்றும், காணமல் போனவர்களைக் காண்பிக்கவோ, அல்லது பொருத்தமான விபரங்களையோ காணமல் போனோர் உறவகளுக்கு விரைவில் வழங்க வேண்டும்.

5. தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு தமிழ் முஸ்லீம் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு சுயநிர்ணய உரிமைத் தத்தவத்தின் படியும் இணைந்த வடக்குக் கிழக்கு மாநிலத்தில் தன்னாட்சி உரிமைத் தத்துவத்தின் படி தீர்வு ஒன்றைக் காணும் வகையில் அரசு தீர்வை முன் வைக்க வேண்டும் என்றும் அந்த அடிப்படைக் கோட்பாடுகளில் எந்த விட்டுக் கொடுப்புக்களுமில்லாமல் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அணைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றோம்.